ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட பல்லாவரம் – பரங்கிமலை கண்டோன்மெண்டில் நடைபெற்ற சாலையோர வியாபாரிகள் சங்கத் தேர்தலில் முழுமையாக வெற்றி பெற்ற கழக அணியைச் சார்ந்த எம். பசுபதி, ஜோதீஸ்வரன் நடராஜன், பாத்திமா, ராஜன், காண்டீபன், ராஜலட்சுமி ஆகிய 6 வேட்பாளர் களை குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வாழ்த்தி மகிழ்ந்தார். அருகில் நகரச் செய லாளர் டி.பாபு, நகர பொருளாளர் ராஜி, நகர மாணவர் அணி அமைப்பாளர் எம்.பி.மகேஷ் உள்ளிட்டோர் உள்ளனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கொளத் தூர் மேற்குப்பகுதியில், மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா 22, செந்தமிழ் உணர்வு உதிரத்தில்! திராவிட மாடல் சிகரத்தில்! எனும் தலைப்பில், மாபெரும் இரத்த தான முகாம், சென்னை, பெரியார் நகர், கார்த்தி கேயன் சாலை, திருவள்ளுவர் திருமண மண்டபத் தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஆர்.எஸ். சித்திக் தலைமை யில் நடைபெற்ற மாபெரும் ரத்ததான முகாமை ENT. சிகிச்சை நிபுணர் மோகன் காமேஷ்வரன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி,கே. சந்துரு, பரிதிஇளம்சுருதி எம்.சி, , எஸ்.தனசேகர், துரைகண்ணன், ம.அசோக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் செயல் வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நெல்லை மேற்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!

நெல்லை, மார்ச்.3.

நெல்லை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று 03.03.2026 மாலை 4 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடை பெறுகிறது என நெல்லை மேற்கு மாவட்ட பொறுப் பாளர் இரா. ஆவுடையப் பன் அறிக்கையில் தெரி வித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்தி ருப்பதாவது:-

முதலமைச்சர் கழகத்த லைவர், அன்புத்தளபதி யார் அவர்களின் ஆணைப் படி, தலைமை கழக வழிகாட்டுதலின்படி, இன்று 03.03.2026 செவ் வாய்க்கிழமை மாலை 04.00 மணிக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் திருநெல்வேலி மேற்கு மாவட்ட கழக அலுவல கம்,டாக்டர் கலைஞர் அரங்கத்தில் வைத்து நடை பெற உள்ளது.

இதில் அம்பாசமுத்தி ரம், ஆலங்குளம் சட்ட மன்ற தொகுதிக்கு உட் பட்ட தொகுதி பார்வை யாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள்,மாநில அணி நிர்வாகிகள், தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலா ளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆகி யோர்கள் தவறாமல் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. மார்ச்-9 மாநில மாநாடு, 2. 2026 சட்டமன்ற தேர்தல் பணி கள், 3. கழக இளைஞரணி செயலாளர் துணை முதல் வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வருகை, 4. கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

தியாகராயர் நகர் தொகுதி 135 வது வட்டத்தில் அசோக் நகர் வட்டார நூலகம்

முதலமைச்சர் படைப்பகம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - மா.சுப்பிரமணியன் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு! ஜெ.கருணாநிதி - கே.ஏழுமலை அறிக்கை!

சென்னை, மார்ச். 03

தியாகராயர் நகர் கிழக்கு பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர்நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழு மலை எம்.சி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் தொகுதி, 135 வது வார்டு, 11வது அவென்யூ பகுதியில் CMDA சார்பில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் 0.5 ஏக்கர் நிலப்பரப்பில் 15,118 சதுர அடி பரப்பள வில் அமைந்துள்ள முதல் வர் படைப்பகம் மற்றும் அசோக் நகர் வட்டார நூலகம் திறப்பு விழா இன்று (03.03.2026 செவ் வாய்க்கிழமை) காலை 9 மணியளவில், அசோக் நகர், 11 வது அவென்யூவில் நடைபெறுகிறது.

முதல்வர் படைப்ப கத்தை தமிழ்நாடு முதல மைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் இந்து அறநிலையத்துறை அமைச் சர் பி.கே.சேகர்பாபு, மருத் துவம் மற்றும் மக்கள் நல் வாழ்த் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தென் சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் முனை வர் தமிழச்சி தங்கபாண்டி யன், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, தொகுதிப் பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி. மற்றும் மு.ம. செந் தில்குமார், வழக்கறிஞர் எம்.கே.மூர்த்தி, ஆர்.சக்தி வேல், ஜி.பி.செந்தில்கும ரன், மு.செல்வகுமார், ஆர். லோகு, கோ.உதயசூரியன், வழக்கறிஞர் எஸ்.லட்சுமி காந்தன், டி.கமல், தட்சன் ஹரிஹரன், ந.மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, பி.ஜெயக்குமார், பி.மாரி ஆகியோர் கலந்து கொள் கின்றனர்.

எனவே மாவட்டக் கழக, பகுதிக் கழக நிர்வாகி கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப் பாளர்கள், துணை அமைப் பாளர்கள், வட்டக் கழகத் தைச் சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பி க்கும்படி பகுதிச் செயலாளர் கள் ஜெ.கருணாநிதி எம். எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் கேட் டுக்கொண்டுள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!

03.3.2026 இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் விவரம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை,மார்ச்.1-

அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு வருமாறு:

மனிதநேயம் - 26

தமிழரின் வாழ்வில் ஒளி பிறந்தது!

சரித்திரம் தொடர நீதிம் மலர்ந்தது!

நாள்: 03.3.2026, செவ்வாய்கிழமை, காலை: 8.00 மணி

இடம்:எழும்பூர்மகப்பேறுமருத்துவமனை

தலைமை: க.வினோத், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்

மார்ச்1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிப்பவர்

ஆர்.எஸ்.பாரதி

கழக அமைப்புச் செயலாளர்

அன்புடன்: மாவட்ட இளைஞர் அணி

எழும்பூர் வடக்கு/தெற்குப்பகுதி

மனிதநேயம் - 27

செந்தமிழ் களத்தில் சிந்தனை சொற்போர்!

திராவிடம் கற்போர், சிகரமாய் நிற்போர்!

நாள்: 3.3.2026, செவ்வாய்கிழமை, மாலை: 4.00 மணி

இடம்: திருவள்ளுவர் திருமண மண்டபம்

தலைமை: அமுதா பொன்னிவளவன், எம்.சி,

68வது வட்ட மாமன்ற உறுப்பினர்

தலைப்பு:

இளைஞர்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பது வீடா? நாடா?

பட்டிமன்றம் நடுவர்

கவிதாயினி ஜவகர்

வீடே?

முனைவர் திரு.அபு, திருமதி. இராஜேஸ்வரி கடையம்

நாடே?

திருவாரூர். திருமதி. ஜெயஸ்ரீ சென்னை திரு. இராஜ்குமார் நாகர்கோவில்.

அன்புடன்: 68, 68அவட்ட திமுக கொளத்தூர் கிழக்கு/மேற்குப்பகுதி

மனிதநேயம் - 28

பண்பாட்டு கலையை பறைசாற்றுவோம்!

பயன்பாட்டு வழியை நிலைநாட்டுவோம்!

நாள்: 03.3.2026, செவ்வாய்கிழமை, மாலை: 6.00 மணி

இடம்: தானா தெரு, புரசைவாக்கம்

தலைமை: சொ. வேலு, எம்.சி, பகுதி கழகச் செயலாளர்

இசையரங்கத்தை துவக்கி வைப்பவர்

திரைக்கலைஞர். கருணாஸ்

(தலைவர் - முக்குலத்தோர் புலிப்படை)

கலைமாமணி ட்ரம்ஸ் சிவமணி

இசைக்குழு:

மகேஷ் இன் ஷாமலா

பாடகர்கள்:

V.M.மகாலிங்கம் - மதிச்சியம் பாலா

இசைவாணி

அன்புடன்: 78, 78அவட்ட திமுக எழும்பூர் வடக்குப்பகுதி

இவ்வாறு அமைச்சர்-மாவட்டச்செயலாளர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (03.03.2026 - செவ்வாய்க்கிழமை) மதியம் 12 மணிக்கு சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: திருச்சியில் நடைபெறும் மாநாடு மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ.

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

அமைச்சர் தா.மோ. அன்பரசன் –

இ.கருணாநிதி எம்.எல்.ஏ.- எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம்!

பகுதி கழக செயலாளர் பம்மல் வே.கருணாநிதி அறிக்கை!

சென்னை மார்ச் 3-

பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர், மண் டல குழுத் தலைவர் பம் மல் வே.கருணாநிதி விடுத் துள்ள அறிக்கை வருமாறு;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார் பில் அவைத் தலைவர் ப. காளேஸ்வரன் தலைமை யில், 6வது வட்ட கழக செயலாளர் வி.எஸ்.ஜெக நாதன் வரவேற்புரையில் பகுதி பொருளாளர் ஆர். உமாசங்கர், பகுதி துணை செயலாளர்கள் என்.பன் னீர்செல்வம், பா.கவிதா, துரை இளங்கோவன், மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதிகள் பி.ஜே.வேந் தன், என்.கே.ரவிச்சந்தின், இரா.கந்தவேலு, ரா. கோகுல்,

சு.மனோகரன் ஆகி யோர் முன்னிலையில் பம் மல் எஸ்.எஸ்.மஹால் திரு மண மண்டபத்தில் நாளை (04-03-2026) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், இ. கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகின் றனர்.

இதில் மேயர் க.வசந்த குமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தொகுதி பொறுப்பாளர் ரபி அக மது, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த. ஜெயக்கு மார் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ. தமிழ்மாறன், மாவட்ட மாணவரணி அமைப்பா ளர் பேராசிரியர் L.பிரபு, காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப் பாளர் V. ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளை ஞரணி அமைப்பாளர் P.K.A. சத்திய பிரபு, தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன் னாள் பேரூர் செயலாளர் பா.செல்வம், முன்னாள் பேரூர் செயலாளர் P.S. ரவி EX MC, வட்டக் கழக செயலாளர்கள் A.அனிஸ் டன், மு.இன்பசேகர் MC, N. காந்தி, H. முகமது அப் பாஸ், M. சுகுமாரன், P. ஸ்ரீதர், தாம்பரம் மாமன்ற உறுப்பினர்கள் A. மதினா பேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன் ஆகியோர் சி ற ப் பு ரை யா ற் று கின்றனர்.

இதில் பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, பகுதி அணிகளின் அமைப்பாளர் கள் துணை அமைப்பாளர் கள், வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர் கள்(BLA-2), கழக முன் னோடிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திர ளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதி கழக செயலாளர் தாம்ப ரம் மாநகராட்சி மண்ட லம் 1 குழுத் தலைவர் பம் மல் வே.கருணாநிதி அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

பொருள்:-

1.ஸ்டாலின் தொடரட் டும் தமிழ்நாடு வெல்லட் டும்

9/03/26 அன்று திருச்சியில் நடைபெறும் மாநில மாநாடு நடைபெ றுவதில் கலந்து கொள்வது சம்பந்தமாக 2.பாக அள விலே ஸ்டாலின் மகளிர் படை பணிகள் விரைந்து முடிக்க 3.கழக வளர்ச்சி பணிகள் குறித்து

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் கொள்கை பரப்புச் செயலாளர் முன்னாள் ஒன்றிய அமைச்சருமான முனைவர் டாக்டர்எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., தலைமை செயற்குழு உறுப்பினரும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் முன்னிலையில் திருவள்ளூர் நகரம், சி. வி.நாயுடு சாலை ஹோட்டல் கே. எஃப்.சி. கட்டிடத்தில் அமைந்துள்ள திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நாளை (04-03-2026 - புதன்கிழமை) மாலை 4 மணி அளவில் நடைபெறுகிறது.

இதில் நகரக் கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

அது சமயம் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி, தொகுதி பார்வையாளர்கள் மாஸ்டர் சேகர், சண்முகநாதன்,மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேஷன். ஓ.ஏ.நாகலிங்கம், இ.குருதாஸ், டாக்டர் வி.சி. ஆர். குமரன், சி.ஜெயபாரதி, எம். மிதுன்சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே. ஆதாம் வி.சிஷோர் மு.சுப்பிரமணியம், ராஜேஸ்வரி ரவிந்திரநாத் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் மேற்கண்ட கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள். கழக நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

பொருள்- மார்ச் 9ஆம் தேதி அன்று திருச்சியில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கழக மாநிலமாநாட்டில் பங்கேற்பது குறித்து

திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,

செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 73வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 19வது வட்டம் மாத்தூரில் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம் எல் ஏ தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ.அருண், மாவட்ட துணை செயலாளர் டி.ராமகிருஷ்ணன்,வட்டச் செயலாளர்கள் மாத்தூர் கா.தாமரைச்செல்வன், கே.கருணாகரன், வி ஆர். குப்பன், இ. கண்ணப்பன், கே. அங்குசாமி, பி. எஸ். சந்துரு, மஞ்சம்பாக்கம் பாபு, கவுன்சிலர் காசிநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னட்டு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், வழக்கறிஞர் ச.சங்கர்கணேஸ் எம்.சி.ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளிக்களுக்கான கிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்து பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா எம்.எல்ஏ.ஆகியோர் வெற்றி பெற்ற அணிகளுக்கு பணமுடிப்பு மற்றும் கோப்பைகளை வழங்கினர்.இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி சென்னை வடக்கு திட்டம் தண்டையார்பேட்டை கோட்டம் மீஞ்சூர் உப கோட்டத்தில் தொ.மு.ச. பேரவை கொடி யேற்றியும் பிறந்தநாள் கேக் வெட்டியும் 500 பேருக்கு அறுசுவை உணவு தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் முன்னாள் மாநில தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு திட்ட நிர்வாகிகள் டி.அருள், கு.மாறன் வேதமணி தண்டையார்பேட்டை கோட்ட செயலாளர் எம்.இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மீஞ்சூர் உப கோட்ட நிர்வாகிகள் இ.கோவிந்தராஜ், ரவி, தேவராஜ், மோகன், சிவசங்கர் ,பார்த்திபன் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.